# குருவிக் கூடு



ஏ.தாரிக்

நெஞ்சம் வெளியீடு

811.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of ...
27 JUN 2011
Library

அன்பளிப்பு

செல்வி.சி.மதுராந்தகி

தமிழ் - சிறப்புக்கலை

1996 - 2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையல்

இக் கவிதைத் தொகுதியை என் அருமைத் தாய் ஏ.எல்.விந்தானி உம்மா அவர்களுக்கும், என்னை சீராட்டி வளர்த்த தந்தை ஐ.ஆதம் பாவா அவர்களுக்கும் சமர்ப்பணம் செய்கிறேன்.

University of Peradeniya
27 JUN 2011
Library
641227



641227
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிவு :- 1998

ஆசிரியர் :- ஏ.தாரிச்

உரிமை :- ஏ.தாரிச்

விலை :- 30 ரூபா

அச்சுப் பதிப்பு :- MICRO Graphics Offset Printers
மாவனல்லை.

University of Peradeniya
27 JUN 2011
Library



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவிக் கூடு



ஏ. தாரிக்

TAMIL RESERVE
University of Peradeniya
27 JUN 2011
Library
641227


நெஞ்சம் வெளியீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவிக்கூடு

University of Peradeniya
27 JUN 2011
Library



641227

நெஞ்சம் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

கற்றலுண்ணல் கற்பித்தலூட்டல்
நற்றவம் நல்லறம் தலை:
என் பேனா சுரந்த தேன் இது.

அறிவுச் சூரியர்களுக்கும் வெண்மலர்களுக்கும் இடையிலான பாலம் இதில் பூத்திருக்கிறது.

கவிதை மழைக்குக் குடை.
இதயத்திற்கு சுவாசம்.
விருட்சத்திற்கு விதை.
இருளுக்கு ஒளி.

கவிதை வாழ்க்கை என்பது கனவுகளும் நினைவுகளும் கலந்து செய்வது
இன்பமும் துன்பமும் இணைந்து நெய்வது:
இலக்கு நோக்கி அம்பு எய்வது.

இந்த கந்தளாய் தென்றலுக்கு மாவனல்லைச் சோலை வாசம் வழங்கியிருக்கிறது.

ஒரு மாணவனை கவிஞனாக்கிய பெருமையால் எனக்குள் ஆயிரம் பூக்கள்.

சூரியன் தொலைந்து போன விடியல்களிலும் நிகழ்கால உதயங்களிலும் பல வெண் பூக்களுக்கு கவிதை மழை கொடுத்திருக்கிறேன்.

அதனால் என் தமிழ்ச் சேவை தலை நிமிர்ந்து நிற்கிறது. தமிழ்த் தாகம் இன்னும் இன்னும் வளர்ந்து கொண்டிருக்கிறது.

இந்தப் பூந்தோட்டத்தில் என் வாசம் நிறையவே கமழும். அது ஒரு ஆசானுக்கு மாணவன் கொடுக்கும் கைதட்டல்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் இலக்கிய விருட்சத்தில் வாழ்த்துப் பூக்களாகப் பூப்பதில் கந்தளாய் கவிக்கு விருப்பம் வந்தது. வாழ்த்தில் வாசம் போதாதென்றும் இன்னும் வேண்டும் என்றும் என் மாணவிக்கு கோபம் எழுந்தது.

அதனால் மலந்ததுதான் சில பூக்கள்.

அறியாமை புரியாமை தெரியாமை இம்மூன்றும்
இல்லாமை நல்லாசானுக் கழகு.
இந்த ஈ ர் வரி பா ஆசான் பற்றிய என் இலக்கணம்.

இந்த இலக்கிய நறுமணத்தினை நுகர்ந்து அன்பு பகர்ந்தவர்தான் தாரிக்.

இந்த விதையினை இனங்கண்டு நீரூற்றியுள்ளேன். பூக்கள் பூக்கவும் அந்தப் பூக்கள் மாலையாகவும் வாழ்த்துப் பூக்கள் சொரியுங்கள்.!

கவித்துவ நறுமணம் இப்பூக்களில் குடியிருக்கின்றது. அதனால் இந்த சின்னக்குருவி குருவிக்கூடு கட்டியிருக்கிறது.

கந்தளாய்க் குருவி உயர உயரப் பறக்க வேண்டும். பசுமைப் பந்தை வலம் வர வேண்டும்.

என் வாழ்த்துப் பூத்தூவல்கள்!
பாராட்டுக் கைதட்டல்கள்!

28.09.1998

என்றும் அன்புடன்
நிந்ததாசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

உலக தமிழ் இலக்கியங்களைப் பொறுத்த வரையில் அது சமூகத்தில் தனித்துவமான ஓர் இடத்தைப் பெற்றிருப்பதை நாம் அவதானிக்கலாம். இருந்தும் சங்ககாலம் தொட்டு பல கவிஞர்களால் கவிதைகள் பாடப்பட்டு வருகின்றன. அதிலும் அக்காலத்திலிருந்தே மரபுக்கவிதை மிகவும் பிரபல்யம் வாய்ந்திருப்பதை இலக்கிய ஆராய்விலிருந்து கண்டறியக் கூடியதாக உள்ளது. ஆனால் கவிதைகள் யாப்பதிலேயே தன் உடலையும் உயிரையும் அர்பணித்த பெருமைக்குரியவரும், போற்றுதலுக்குரியவருமான மகா கவி பாரதி வசன கவிதை என்ற அமைப்பில் புதுக்கவிதையின் அடித்தளத்தை போட்டுவிட்டு அவரின் உடல் மண்ணில் மறைந்து போனது. அதைத்தொடர்ந்து நா.பிச்ச மூர்த்தி என்பவரால் புதுக்கவிதை முத்துக்கள் பிரபல்யமாக்கப்பட்டன. அந்த வகையில் இன்று இலக்கியவுலகில் ஒவ்வொரு மனிதனிடமும் புதுக் கவிதைகள் பூத்துக்குலுங்குவதை காணலாம். அதே போன்றுதான் என் இதயத்திலும் புதுக்கவிதைத் தென்றல் வீசியது. அதற்கமைய என் இரத்தத்திலும் புதுக்கவிதையின் படிமங்களும், குறியீடுகளும் படிந்தது.

உண்மையில் ஒரு கவிஞனை கவிதை எழுதத் தூண்டுவது அழகிய காட்சிகளும், ஆனந்தமான பேச்சுக்களும், உணர்ச்சியின் ஈர்ப்புக்களும் கற்பனையின் ஒன்று கூடலும் ஆகும். இவ்வாறான சூழ்ச்சிகள் எல்லாம் எனக்கிருந்தும் என்னால் அதன் அமைப்புக்களை சரியாக விளங்கிக்கொள்ள முடியாதிருந்து அந்த சூழ்நிலைகளில்தான் என் ஆசான் நிந்ததாசனின் (A.C. றாஹில்) அன்பும், ஊக்குவிப்பும் எனக்குக் கிடைத்தது. இக்கவிஞரின் தூண்டுதலும், தனிப்பட்ட முறையில் அவர் என் உணர்வுகளைப் புரிந்து அதற்கேற்ற வகையில் கவிதையின் ஆழத்தையும், அவசியத்தையும் எனக்கு உணர்த்துவதாலுமே என்னில் கவிதை ஊற்றுக்கள் அருவியாக ஓடத் தொடங்கி இன்று ஒரு குளமாக மாறியிருக்கின்றது.

ஒவ்வொரு ஆணுக்கும் ஆரம்பத்தில் காதல் கவிதைகள்தான் மனதில் ஊற்றெடுக்கும். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் அது முற்றிலும் தூரமானது. ஏனெனில் முதலில் நான் எழுதிய கவிதை 'உதயம் எப்போது?' என்னும் தலைப்பில் அமைந்த ஒரு கவிதையாகும். அதாவது ஒரு சமூகத்தின் மீது காணப்படுகின்ற குறைகளை திருத்தி அமைக்கும் வகையிலேயே அந்தக் கவிதை அமைந்திருந்தது. இதன் பிறகும் பல கவிதைகள் எழுதிய பின்புதான் என்னில் காதல் கவிதைகள் பிறந்தன. இதன் பிறகு எத்தனையோ கவிதைகளை நான் கருவாகத் தரித்து குழந்தைகளாகப் பெற்றெடுத்தேன். இக்கவிதைகளைப் பார்ப்பீர்களானால் இதில் சில கவிதைகள் தனிப்பட்ட ஒருவரைக் குறித்து எழுதியதாக காணப்படும். ஏனெனில் 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்று கூறுவார்கள். அதன் பிரதிபலிப்பாகத்தான் என்னை ஒரு புத்தகமாக்கிய என் மதிப்பிற்குரிய ஆசானும் கவிஞருமாகிய நிந்ததாசனை வாழ்த்திய கவிதைகளாகவே அக்கவிதைகள் அமைந்திருக்கின்றன. அதிலும் இருகவிதைகள் போட்டிக்கவிதைகளாகும். அதாவது என் ஆசானைப்பற்றி வாழ்த்துக்கவிதை ஒன்று எழுதிய போது அக்கவிதையை மறுத்து எனது வகுப்பைச் சேர்ந்த ஒரு பெண் சகோதரி எழுதிய கவிதைக்கு போட்டியாக எழுதிய கவிதையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் அனேகமான கவிதைகள் மக்களை விளித்துப் பேசுவதாக அமைந்திருக்கின்றது. அதாவது நாட்டை சீர்படுத்தும் கவிதைகளாகவும், மக்களிடையே காணப்படுகின்ற தவறுகளை திருத்த வேண்டும் எனப் பிரதிபலிக்கின்ற கவிதைகளும், இஸ்லாத்தை இஸ்லாமிய மக்கள் எந்த வகையில் அறிந்து நடத்தல் வேண்டும், பெண்ணுக்கு மதிப்புக்கொடுக்க வேண்டும், காதலின் வெளிப்பாடுகள் எவ்வாறு அமையும், அந்த நெஞ்சங்கள் நிலை எவ்வாறிருக்கும் என்பது போன்ற கவிதைகள் இப்புத்தகத்தினுள் அடங்குகின்றன.

அத்துடன் தற்போது மாவனல்லை ஸாஹிரா தேசியப் பாடசாலையில் கலைப்பிரிவில் பதிமூன்றாம் ஆண்டில் படித்துக் கொண்டிருக்கிறேன். இவ்வாறு பாடசாலை வாழ்க்கையிலேயே பதினெட்டாவது வயதில் இப்புத்தகத்தை வெளியிடுவதில் மிகுந்த சந்தோஷமும் மன நிறைவும் அடைகிறேன். இவ்வாறான சூழலையும், சூழ்நிலையையும் ஏற்படுத்தித்தந்த என் ஆசானுக்கு வாழ்த்துக்கள் கூற என்னில் வார்த்தைகள் போதாது. நான் கந்தளாய் மண்ணில் பிறந்து வளர்ந்தாலும் என் கலைக்கு மாவனல்லை மண் உதவி செய்தது. அத்தோடு என்னுடைய சிறிய வயதில் புத்தக வெளியீட்டுக்காக எதுவித இலாபமோ அல்லது மனக் கலக்கமோ ஏற்படாது பணத்தை தந்த என் தந்தைக்கு என் நன்றியை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அத்தோடு இந்தக்கவிதை உலகம் என்னைக் கவிஞராய் ஏற்காவிட்டாலும் என் கவிதைகளை ஏற்பீர்கள் என்று என் மனம் இசைக்கின்றது. இப்புத்தகத்தை வெளியிடுவதன் நோக்கம் நான் அறிமுகமாக வேண்டும் என்பதல்ல. எனது பிறந்த ஊர் (கந்தளாய்) அறிமுகமாக வேண்டும். பிற நாடுகளில் என் நாடும் தலை சிறந்து பேசப்பட வேண்டும் என்பதுமாகும்.

இந்த நூலை அழகாக அச்சிட்டுத்தந்த 'மைக்றோ கிரபிக்ஸ்' அச்சகஉரிமையாளருக்கும், அட்டைப்படம் வரைந்த சித்தி நூர்ஜஹானுக்கும் என் நன்றி.

அத்துடன் இக்கவிதைகளை கண்களால் சுவாசித்து இதயத்தால் மகிழ்ச்சியடையும் வாசக முகங்களுக்கு என் நன்றியையும், இவ்வாறான சிறப்புக்களை எல்லாம் அனுபவிக்கும் வரத்தை அருளிய வல்ல இறைவனுக்கு என் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏ. தாரிக்,
இல. 197D,
சமகி மாவத்தை,
கந்தளாய்,
இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விப் பயிர்

அன்பான சோதர சோதரியரே
உங்கள் கல்விக்கு
நற் சிந்தனை சொல்ல,
நால் வரியில்
நானெழுதிய
நற் கவிதை பாரீர்!

யுத்தமெனும் போர்வையால்
போர்த்துக் கிடக்கும்
உலகம்,
எம்மை ரத்தமெனும்
அருவியில்
நீராடச் செய்வதை பாரீர்!

வீடுகளில்....
பாடலோசையை ரசித்த
உள்ளங்கள்,
இன்று வெடியோசையை
ருசிக்க இயலாமல் மாய்கிறார்கள்
பிள்ளைகள் அநாதையாக!

நாம்...
கல்வியெனும் கொழுகொம்பில்
படர்ந்த கொடிகள்,
எம் பக்க அரும்புகள்
நீதியெனும் அறத்தில்
அடியெடுத்து வைக்கையில்தான்
வளர்ந்து வரும் முளையும்
நேர்மை எனும் கொழு கொம்பில்
படரும்!

எம்மில்....
உயர்ந்தவர்களைக் கண்டு
நாம் தளர்ந்ததுண்டு,
தாழ்ந்தவரைக் கண்டு
நிமிர்ந்ததும் இல்லையே!

நாம்.... கல்வித்தாயின்
பிள்ளைகள்,
தந்தைதான்
எம் நாடு....
எனின்,
தாயின் வழியில்
நாம் செல்ல....
தந்தையின் புகழ் ஓங்கிடுமே
உலகெங்கும்!

நீங்கள் தினமும்
ஊற்றும் நீரில்
ரோஜா மலர்ந்து வாழுகிறது,
ஆனால்...
கல்வியெனும் மதுவை
அருந்துங்கள்
மாண்ட பிறகு
உலகில் பிரகாசிப்பீர்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்றல் கவிஞன்

இந்த
சிறகில்லாத தென்றல்
அடிக்கடி
சிகரத்தின் உச்சியை
சீர் பார்த்து வருகிறது.

பல தடவைகள்
பாதையில் பறக்கும் போது
அதில்.....
மாசுக்கள் படிந்து விடுமோ...
மாயக் கலைகள்
மாய்ந்து விடுமோ....
நினைத்தால்
நெஞ்சம் உருகுகிறது!

பழங்கால சுப்பையா
பதினைந்து வயதில்
பாடல்களில்
பாராட்டப் பெற்று
பாரதி எனும்
பட்டம் பெற்றான்..!

பத்தொன்பது வயதில்
என் ஆசான்!
புதுமையான படிமங்களை
பத்திரிகையில் புகுத்தி
தாய் நாட்டின்
கலைமகனானான்!

பதினைந்து வருடம்
கடந்து
பல படிகளைத் தொடர்ந்து
நாடுகள் சில பறந்து
கலைகள் முழுவதையும்
பயின்று
பல்கலை வேந்தன்
பட்டம் பெற்றான்
நிந்ததாசன் எனும் பெயராக!

அவன்
புலமைக்கும்
புதுமைக்கும்
இந்நாடு
நாட்டம் காட்டவில்லை!

இருந்தும்.....
புலமைக்கேற்ற
புகழாடைகள் வழங்கியது
பொன்னாடைகளை மறந்தது!

இந்தக் கவிஞனின்
வயது
வருடத்தில் ஒன்று
முதிர்ச்சி பெறுகிறது....
கவிதைகளோ!
வருடத்தில் இரண்டாக
இளமையடைகிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உடல்
காலத்தால்
களைத்த போதும்
கவிதைகள்
காலத்தால்
புதுமையாகிறது...
பூரணமடைகிறது!

இந்த
சிறகில்லாத் தென்றல்
சிகரத்தின் உச்சியில்
சிம்மாசனம் அமைக்கட்டும்......

தலை பணிந்து
பார்த்த புயல்கள்
என்
தென்றல் கவிஞனின்
ஒளியை
நிமிர்ந்து பார்க்கட்டும்!

கவிஞனே!
காலமும் நேரமும்
வரட்டும்
வாய்மை வெல்லட்டும்!
புகழ் பெருகட்டும்!

## உதயம் எப்போது



இனவாதம் எனும்
கோட்பாட்டுக்குள்
யுத்தம் எனும்
ரத்தத்தில் - மொட்டு
விரியா இதழைப்
போல் முகத்தை
மூடியிருக்கும் முத்தமிழே!
உன்னுள்
துவண்டு கிடக்கும்
துறவறமற்ற
தமிழ் நயத்
துளிகளை - இம்
மண்ணில் அச்சமின்றி
ஊற்றிவிட - உன்
உயிருக்கு உதயம்
எப்போது?

அன்று
போதையின் அடிமைத்
தனத்தை நீக்கி - ஆணுடன்
பெண்ணுக்கு சம
சுதந்திரம் வழங்கென்று பாடி,
பேதையர் மத்தியில்
உதயத்தை ஒளிரச்
செய்தான் பாரதி..
இன்று
யுத்தம் எனும்
ரத்த வெள்ளத்தில்
நனைந்து தவிக்கும்
இருண்ட விழிகளுக்கு
ஒளி எனும் உதயம்
எப்போது?

University Library 27 JUN 2011

கள்ளுடைத்து
பாய் பின்னி
கருவிலிருந்தே – கல்வி
ஊட்ட – உன் சிறிய
தரத்திலும் முதன்மை
பெற்று – பெரிய
தரத்திலும் கஸ்டப்பட்டு
பட்டப்படிப்பில் பாடுபட
பல்கலைக்கழகத்தில்
காலடி வைக்கையிலேயே...
அங்கு பகிடிவதை எனும்
கொடுமையும் படுகிறாயே,
மாணவனே! அதிலிருந்து உன் வாழ்வுக்கு
கொற்றம் எனும் உதயம்
எப்போது?

பாலில் நீரைச்
கலப்பது போல்
பசுந்தமிழில்
ஆங்கிலத்தைக் கலக்கும்
ஆசாமிகளே!
எம் தாய் மொழி
தமிழ், நாட்டில் வளர்வதற்கு
நட்டு வைக்க வேண்டிய
நலமகன்களே!
தமிழ் எனும்
பயிரை சுடும்
வெந்நீரில் கலந்து
விடாதீர்கள் – தூய
பன்னீரில் கலந்து – அதன்
வித்துக்களை
கலப்படமின்றி
நாட்டில் உதயமாக
விடுங்கள்.....
அப்போதுதான்
பல்கலைக் கழக
பகடிவதை எனும்
கொடுமை ஒழிந்து – தூய
தமிழ்
மக்களிடையே
உதயம் எனும்
ஒளியாய் உதிக்கும்!

பிறப்பிலிருந்து
தனக்கெப்போது
உதயமோ..
அப்போதே
தன்னிலிருந்து
தனக்கு உதயம்
பிறக்கும்!

## தலை எழுத்து

ஓ...
சின்னப் பெண்ணே,
நீ பெரிய பிள்ளை
ஆகிவிட்டாய்!

இனி,
உன் சில்லறை
விளையாட்டுக்களெல்லாம்
தொட்டியில்
போடப்பட்ட
மீனாகிவிடும்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்
நட்சத்திரப் புன்னகைக்கு
பூட்டுப் போடப்படும்!

உன்
பேச்சுகளுக்குக்கூட
ஊமை வசனங்கள்
கற்றுக் கொடுக்கப்படும்!

இதயத்தின்
இன்பங்களை எல்லாம்
உன் பருவம்
பறித்து விடும்!

ஓ.... பெண்ணே!
இனிமேல்... நீ
தாலி வலைக்குள் சிக்குண்ட
சிறுமிதான்!

இதுவரைக்கும்
பாரதியின்
புதுமைப் பெண்ணாயிருந்தாய்
இனி
உன் தாலியின்
அடிமைப் பெண்ணாகிவிடுவாய்!

ஓ...
சின்னப் பெண்ணே,
நீ பெரிய பிள்ளை
ஆகிவிட்டாய்!

# பெண்மைக் கவிஞனும் உண்மைக் கவிதையும்

**போட்டிக் கவிதை (2)**



விமர்சிக்கும்
பெண்ணே!
வாழ்த்தவும்
பழகிக் கொள்!

நிந்தாசனை
என் கவிஞன்
என்றேன்!
ஏன்?
அதில் முட்டுகிறாய்!
பொறாமை போலும்!

மாதா பிதா
என்னைப் பெற்றது!
என்னில்
கவிதை எனும்
விதையை நட்டது
என் ஆசான்
மறவேனா...?

நிந்தாசனை
வாழ்த்தினேன்
நீ என் கவிதையை
விமர்சிக்கிறாய்!
என்னையும் சோதிக்கிறாய்!
எனக்கு
மூளையில்லை
என்றாய்!

27 JUN 2011 Library



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரிப்பு வருகிறது...
உனக்கு
இதயமில்லை என்பதை
புரிய வைத்ததே
என் மூளைதான்!

உன் பாஷை
தெரியாமல்
புலம்பிவிட்டேன்
என்றாய்
மன்னித்துவிடு!

நேற்றுகளில்தான்
அறிந்தேன்
நீ
ஊமை என்று!

உண்மைச்
காதலுக்கு உயிரில்லை
என்கிறாய்!
பாவம்
யாருன்னை
காதலித்தது
ஏமாந்து விட்டான்!

விண் மீன்
கவிஞன் என்றேன்
ஓ....!
எட்டாத தூரத்தில்
வைத்திருக்கிறேன்
முடிந்தால்
யாரும் எட்டலாம்!

காதல்
தேற்ற வேண்டும்
தோற்க வேண்டாம்!
சங்க காலம் என்று சொல்லி
மனதை
சலிய வைக்காதே!

நீ....
காதல் போதை என்று
கனவிலும் சொன்னாய்
கவிதையிலும்
சொன்னாய்!

ஓ...!
அன்றைய கனவுகளில்
பேயாக வந்தது
நீதான்!
இன்றுதான் புரிந்தேன்!

பில் கிளிண்டனை
அதிகம்
அறிந்திருக்கிறாய் போலும்!
அவன் மீது
காதலா....???
கிளாரிதான் பாவம்!

என் கவிஞனை
நில வென்கிறாய்
உன்னை
கண்டிக்கவில்லை
கட்டளையிடுகின்றேன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கவீனத்தை
ஒப்பிடாதே
கிரகணம் பிடித்தால்
நிலவுக்கு
நித்திரைதான்!

பாவம் நீ!
வாழ்த்த முயற்சிக்கிறாய்
உவமைதான்
ஊமையாகிறது!

கவிஞனை
மதத்தால் பிரிக்காதே
என்கிறாய்!
ஏற்றுக் கொள்கிறேன்!
அது
எனக்கும் உனக்கும்
மட்டும்தான்!

என் நிந்ததாசன்
உலகக் கவிஞன்!
உலகமறிந்த கவிஞன்!
மதத்தை மதிக்கும் கவிஞன்!
மறக்கச் சொல்லாதே!

நீ....!
தப்பிக்கொண்டாய்
பெண்ணாய்ப் பிறந்து!
விமர்சித்தது
ஆணாயிருந்தால்
மிஞ்சியிருப்பேன்....!
பெண்ணாகி விட்டாய்
கொஞ்சம் வார்த்தைகள்தான்
கோடி வருகிறது!

ஒன்று மட்டும்!
என் கவிஞனை
ஒரு போதும்
வாழ்த்த வில்லை நீ!
வாழ்த்தியதை
விமர்சித்தாய்
அவ்வளவுதான்!

இனி....!
கவலையை விடு!
கவிதையைத் தொடரு!
என்
நிந்ததாசனை
வாழ்த்து!
கவிஞனே!
உன் புலமையை
புலப்படுத்த
என்னில் புத்தி இல்லை!
உன்
வல்லமையை வாழ்த்த
வான் மண்டலமே
சிறிது!

வாழ்க!
உன் புகழ்
வளர்க!

பெண்ணே!
என்
போனா முனையை
நேசித்தது போதும்
அன்புக் கவிஞனை
வாழ்த்து!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பக் கவிஞன்

**போட்டிக் கவிதை (1)**

உன்
கவிதையில்
எனக்கு உடன்பாடு மிகுதி!
ஓ....
உன் தளம்பல்களை
சுட்டிக் காட்ட
உன் கவிதையில்
எனக்கு உடன்பாடு மிகுதி!



நான்
உரைத்தது
உனக்கு
உறைக்குதென்றால்...
இல்லை இல்லை
நீ உரைத்ததுதான்
எனக்கு
கசக்கிறது!

காதல் என்றால்
போதை என்கிறாய்...
நான்
மொழிந்த காதல்
அன்பெனும் பொருள் பூண்டது!
நீ மொழிவதோ
இதயம் பிரியும்
கானல் நீரை வென்றது!

விட்டத்தை அடைக்கும்
கவிஞன் என்றேன்...
ஓ....
திருவள்ளுவர் விட்டதை
மீட்டிய கவிஞனே
என் நிந்ததாசன்!
பாரதியை இஸ்லாமியனாக
அழைக்கட்டுமா...?
உலகம்
என் பெயரை
உச்சரித்தே கொன்றுவிடும்!

இதற்குத்தான் மொழிந்தேன்
இறைவனை வணங்கிடும்
இஸ்லாமியக் கவிஞன்
என் நிந்ததாசனாக!

நீ
புதுமைப் பெண்ணல்லவா
உனக்கு
பழமை புரியாது...
புத்தியிலும் தளம்பல்கள்!

இதனால்தான்
உன் கவிதையில்
எனக்கு
உடன்பாடு மிகுதி!

புகழாடைகள்
அணிந்து வரும் கவிஞரை
உன் புதுமைகளால்
புதைகுழியில் தள்ளாதே..
புகழத் தெரியாத
உன்
இதயத்தால் கொல்லாதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்
பேனா உதிரத்தால்
என் கவிஞனை
உயர்த்திவிடு...
அன்றில்...
வாழ்த்திய கவிதைகளை
கவலையில்
ஆழ்த்திவிடாதே!

நிந்ததாசனே!
உன் புலமைக்கு
என்
புலமைக்கேற்ற
வாழ்த்துக்கள்
ஒளியால் பெருகட்டும்!
வாழ்க.... வளர்க...

பெண்ணே!
அது
உன்னில்
மிதந்த கற்பனை!
இது
எனக்கு நிந்ததாசன் மீது
மிதக்கும் காதல்!

சோதர நண்பியே!
உன் புதுமைக்கு
எந்தன் புகழாடைகள்
உன்
தளம்பல்களுக்கு
என் அனுதாபங்கள்!

என் கவிதையால்
உன் இதயம்
கலங்கியாதா...?
உன்
கவிதை முத்துக்கள்
என்னை மன்னிக்கட்டும்!

## மரணம்

இறைவனின்
நீதி மன்றத்திலிருந்துவரும்
அழைப்பிதழ்!

## அன்பு

மனிதனின்
இதயத்தில் பூக்கும்
பூ!

## கல்வி

விண்வெளியில்
வீடமைக்கும்
ஆயுதம்!

## காதல்

இருபத்தியோராம்
நூற்றாண்டின்
கானல் நீர்!

## கவிஞன்

முட்களைப்
பூக்க வைக்கும்
ஒரு
பட்டாம் பூச்சி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோபம்

மூளையை
தொலைத்துவிடும்
ஒரு
அபார சக்தி!

## பெண்

காமர்களின்
போதைப்பொருள்!
இளைஞனின்
கனவுச் சந்திரன்!
உத்தமனின்
சீதனம்!

## ஆண்

பெண்கள்
விலை கொடுத்துவாங்கும்
வியாபாரச் சரக்கு

## புன்னகை

பொன்னகையை
நிராகரிக்கும்
விலை உயர்ந்த
நகை!

## ஆசை

மனிதனின் முகத்தில்
கரி பூசிவிடும்
கறுப்பு நிலா!

## இன்பம்

உடலை
உன்னதமாக வைத்திருக்க
உதவும்
சிறந்த மாத்திரை!

## வார்த்தைகள்

அரசியல் வாதிகளின்
வாய்களிலிருந்து விழும்
பிணங்கள்....!
காதலர்களின் இதய
முத்துக்கள்....!
பொய்யர்களில்
கொதிக்கும்
எண்ணை

## தாடி

காதலின்
வளர்ச்சியைக் காட்டும்
ஆண்களின் அடையாளம்!

## உலகம்

இன்பத்தையும்
துன்பத்தையும்
தாங்கிக் கொள்ளும்
இதயம்!

## மழைத்துளி

நரகில் நடக்கும்
வேதனையை கண்டு வானம்
பூமிக்கு மடல் எழுதும்
வார்த்தைச் சொற்கள்!

## மின்னல்

அந்த
அழகியின் பார்வை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தேகம்

மனிதனின்
இதயத்தில் படிகின்ற
மாசு!

## பேனை

ஒரு எழுத்தாளனின்
துப்பாக்கி!

## காதல்

என்னவளே!
நீ பூவானால்
நான் வண்டாவேன்!
நீ கொடியானால்
படர்வதற்கு கொழுகொம்பாவேன்!

நீ புயலானால்
உன்னை மயக்கும் தென்றலாவேன்!
கடிகாரமானால்
அதில் சுற்றும் முள்ளாவேன்!

முடிவாய்... நீ
கண்ணகியானால்
நான்...
கோவலனாகிவிடுவேன்!

## கல்விப் பூக்கள்

இந்த நீள்வட்டப்
பந்துக்குள்
ஒய்யாரமாய் ஊஞ்சலாடும்
புகழின் செல்வமே
கல்வி!

புத்திக்கு வித்தாய்
புகழின் சொத்தாய்
உயிரின் தலையாய்
ஊடுருவப் பாயும்
மொட்டு விரிந்த இதழ்களோ
கல்விப் பூக்கள்!

நாட்டின்
நந்தவனங்களாய்
நல்லோரின்
சொந்த வனங்களாய்
வீட்டின்
தீப விளக்காய்
வித்திட்ட செல்வமே
கல்விப் பூக்கள்!

முன்னோரின்
பணமாய்
விண்ணோரின்
செல்வமாய்
நம்மோரின்
கொடையாய்
நட்டு வைத்த பயிரே
கல்விப் பூக்கள்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசத்தின்
சொத்தாய்
நீதியின்
நிஜமாய்
வாதிகளின்
பேச்சுக்களாய்
வரும்
வம்சத்தின்
வழிகாட்டலாய்
வசந்தமிகு மாணிக்கமே
கல்விப் பூக்கள்!

நேர்மையின்
அடித்தளமாய்
நேசத்தின்
விசித்திரமாய்
நிலவின்
பேரொளியாய்
பெருக்கிக் கிடக்கும்
பேரின்பமே
கல்விப் பூக்கள்!

மானிடர்களின்
மணியாய்
மாசர்களின்
அம்பாய்
ஆத்தும ஞானிகளின்
அமுதாய்
வல்லோரின்
வில்லாய்
வித்திடும்
அமுத சுரபியே
கல்விப் பூக்கள்!



வாழ்க்கையின்
ஆணிவேராய்
வாலிபத்தின்
துணை வேராய்
வசந்தத்தின் மக்கட் பேறாய்
வாழவைக்கும்
வசந்த விருந்தாய்
வட்டம் போடும்
வண்ண மதியே
கல்விப் பூக்கள்!

மதலையின்
மழலை மொழியாய்
மானிடனின்
மானசீகப் பொருளாய்
மங்கையோரின்
மாங்கல்யமாய்
மண்ணில் ஊற்றெடுக்கும்
மழைத் துளியே
கல்விப் பூக்கள்!

மானத்தின்
மாணிக்கமாய்
சுவனத்தின்
சொர்க்க புரியாய்
மக்களின்
பொதுச் சொத்தாய்
பரந்து கிடக்கும்
பசுநிற விசும்பின்
நிதமும் ஒளிரும்
விண் மீன்களே
கல்விப் பூக்கள்!

வாடா மலராய்
அழியாப் பொருளாய்
விவாதிகளின்,
உயிர் நாடியாய்
வார்த்தையின்
சிற்பமாய்
அமைந்துவரும்
வண்ணக் கொடியே
கல்விப் பூக்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியப்புக் கவிஞன்

பல புன்னகை மாலையை
அணிந்த கவிஞன் - இவர்
உலகம் போற்றும்
புதுமைக் கவிஞர்!



இலக்கியம் கற்ற
இனிமைக் கவிஞர் - இவர்
இலக்கணம் அறிந்த
அறிவுக் கவிஞர்!

உண்மை பேசும்
உத்தமக் கவிஞர் - இவர்
விட்டதை அடைக்கும்
வியப்புக் கவிஞர்!

திரு வள்ளுவர் போல்
குறள் யாத்த கவிஞர் - இவர்
திருக்குறளை
மீட்டி வைத்த கவிஞர்!

இன்னல்கள் இல்லாத
இன்பக் கவிஞர் - இவர்
இறைவனை வணங்கிடும்
இஸ்லாமியக் கவிஞர்!

மக்களை மதிக்கும்
மாண்புக் கவிஞர் - இவர்
மலர் மீது நடவா
மாலைக் கவிஞர்!

கர்வம் இல்லாத
கருணைக் கவிஞர் இவர்
காதலைப் போற்றும்
கண்ணியக் கவிஞர்!

பழமையை மதிக்கும்
புதுமைக் கவிஞர் - இவர்
நிலவை முத்தமிடும்
விண்மீன் கவிஞர்!

மைத்துளி ஒன்றால்
மகா பாரதம் பாடும் கவிஞர் - இவர்
மா மேதைகளின்
புகழ் பாடும் கவிஞர்!

துன்பத்தில் இன்பம்
நாடும் கவிஞர் - இவர்
துன்பத்தை
மறைத்து வைத்த கவிஞர்!

வண்ணத் தமிழ் பாடும்
வாய்மைக் கவிஞர் - இவர்
வான்லோகத்தில் சிறகடிக்கும்
சிந்தனைக் கவிஞர்!

பொன்னாடைகள்
போற்றப் பெற்ற கவிஞர் - இவர்
புகழாடைகள்
அணிந்து வரும் கவிஞர்!

கவிஞனே! நிந்ததாசனே!
இருண்டு கிடக்கும் உலகினை
வெண் பகலில் ஆழ்த்திட
உன்
பேனா மை விளைந்திடட்டும்!
வாழ்க..... வளர்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியின் நினைவுகள்

தமிழுக்கு ஒரு ஒளி!
மரபுக் கவிதைக்கு
மறு ஒளி!
புதுக் கவிதைக்கு
புது ஒளி!
மக்கள் மத்தியில்
அழியாத ஒளி!
உலகின் உச்சியில்
ஒளி பரப்பும்
நிலவொளி!
அதுதான் மகா கவி
பாரதி!



தமிழில் மூழ்கியவன்
அதை அமுதாய்
ருசித்தவன்!

வெள்ளையனுக்கு
இரத்தக் கொடி
காட்டியவன் - அவனை
வன்மைக் கவிகள் பாடி
வேதனையில் வாட்டியவன்!

அடிமைப் பெண்ணை
புதுமைப் பெண்ணாய்
மாற்றியவன் - புதுமை உலகை
மக்கள் மத்தியில்
நிலைநாட்டியவன்!

அறியாமைகளை
அறுத்தெறிந்தவன் - அறிவை
ஆருயிராய்த் தேற்றியவன்!

மறைந்திருந்து
மரபுக்கவிதை பாடியவன்
துணிந்து நின்று
புரட்சிக் கவிதைகள்
யாத்தவன்!

வெள்ளையனை
விரட்ட
வேடக் கவிதைகள்
பாடியவன்
வார்த்தை அம்புகளை
விட்டு - அவனை
வம்சத்தோடு விரட்டியவன்!

வறியவர்களை
வரவேற்கும் வல்லமைக்
கவி பாடியவன் - இவன்
வன்மைகளை மிஞ்சிடும்
மென்மைக் கவி
யாத்தவன்!

உலகையே உள்ளங்கையில்
வைத்துப் பாடியவன் - இவன்
உண்மைகளை
உயிராய் மதித்து
உரிமைக் கவிதைகள்
யாத்தவன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிகள் யாப்பதையே
தொழிலாய்க் கொண்டவன்
அக்கவிதைகளை உண்டே
பசி தீர்த்தவன்!

இயற்கையை
காதலித்தவன் - செயற்கையை
எழுத்துருவில்
செய்து வைத்தவன்!

இன்பங்களில்
இதயத்தை இசைப்பவன்
ஆனால்
துன்பங்களே இவனைத்
துரத்த வந்த துரோகி!
பாரதி... நீ
மகாகவி!

## உந்தன் ஞாபகம்

இந்த
உருண்டைப் பந்துக்குள்
எம் காதலும்
ஒளிர வேண்டும்!



அன்புக்குரியவளே!
உன் மௌனம்
என்னைக் கொல்கிறது!
ஏனோ....
என் அன்புக் கடல்
உன்மேல் பன்னீராய்
ஊறிக் கொண்டே இருக்கிறது!

என் காதல்
சொல்லத் துடிக்கிறேன்
சோகம் நேர்ந்திடுமோ
மனம் அஞ்சுகிறது!

உன்னிடம்
தூது விட நினைக்கிறேன்
அது சதியாய்
தந்தையிடம் போய்விடுமோ
மனதில் ஒரு கலக்கம்!

உன்னை
மறந்திடலாம் என்றேன்
அன்று படித்த பாடம்
மறந்து விட்டது!
உன் உருவம்
கண்களுக்குள் நீந்துகிறது!

கடலலைகள்
ஓய்ந்து விட்டாலும்
என்னில்
உன் நினைவு
சிறிதும் சிதறாது!

என்னில்
சில மலர்கள்
மணம் வீசுகின்றன
இருந்தும்
என் சுவாசம்
உன் மணத்தையே
எதிர்பார்க்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில சமயம்
இதயம் வெடிக்கப் போகிறது!
அச்சமயம்
உன் நினைவுகளை
கனவாய்க் கண்டு
அமைதிப் படுத்துகின்றேன்!

காதலி!
என்காதலை
கல்லறையாக்காதே!

எம் காதல்
நீரில் எழுத்தல்ல
நிலவின்
பேர் ஒளி!

## மாணவனே நீ உயர்ந்துவிடு !

வண்டுகள்
சிறகால் உயர்கின்றன
உடல்
உணவால் உயர்கின்றது
நீ.....!
உன் பணத்தால்
உயர்ந்து விடாதே,
சீரிய குணத்தால்
உயர்ந்து விடு!

மீனைப் பிடிக்க
தூண்டில் உயர்கிறது
வானைப் பிடிக்க
ரொகட் உயர்கிறது
நாணைப் பிடிக்க
மானம் உயர்கிறது
நீ.....!
அறிவைப் பிடிக்க
கல்வியால் உயர்ந்துவிடு!

நாட்டைப் பிடிக்க
படை உயர்கிறது
நலனைப் பிடிக்க
செயல் உயர்கிறது
கூட்டைப் பிடிக்க
குயில் உயர்கிறது
நீ....!
நல்ல ஆசானைப் பிடிக்க
பணிவால் உயர்ந்துவிடு!

கடலைப் பிடிக்க
நதி உயர்கிறது
மடலைப் பிடிக்க
பூ உயர்கிறது
உடலைப் பிடிக்க
நோய் உயர்கிறது
நீ......!
பெண்ணைப் பிடிக்க
தானாய் உயர்ந்துவிடாதே
உன்
தாயால் உயர்ந்துவிடு!

பூ மணத்தை
உயர்த்துகிறது
புடவை மானத்தை
உயர்த்துகிறது
ஆசை இன்பத்தை
உயர்த்துகிறது
நீ.....!
படைத்த இறைவனை
என்றும்
உயர்த்திவிடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதய வாழ்த்து

புதுமைப் பித்தா
உன்
புதுமை பற்றி
புதுக் கவிதை எழுத
எனக்கு
புலமை பத்தா!

உன்
கதைகள் முத்து
அதை
முத்து முத்தாய்
முத்தமிட
என்
உதடுகளில்
உரம் இல்லை!
நீ
கலையில் கடல்
கலந்திட நினைக்கும்
அருவி நான்!

உன் பேனா முனை
சொரிந்த முத்துக்களில்
மீதியில்லையோ....
மீட்டிட முனைகிறேன்
என்
கலைக் காவியத்தால்!



உன்
பேனா உதிரம்
உதிர்ந்திட வில்லையோ.....
உன்
கற்பனை முத்துக்களில்
கலக்கம் இல்லையே..
அதனால்
மாண்புடன் வாழ்கிறாய்!

நீ
ஊற்றிய கதைகளின்
நுரையை - நான்
பாலகாக அருந்துகின்றேன்
அதனில் கொண்ட
ஆசையால் அல்ல...
நிறைந்துகிடந்த
வார்த்தை முத்துக்களால்!

ஊற்றெடுக்கும் கடலே
உன் கதைகள்
பொங்கி எழ
வாழ்த்துகின்றேன்
வாழ்க!

University of Peradeniya
27 JUN 2011

## என் உயிர்க் காதலி

காதலி
என்னைக் காதலி!

காதல் இல்லை
மனிதன் இல்லை!
என் வாழ்வில்
நீயில்லை
என் உயிருமில்லை!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைக் காணாத
நாட்களில்
நான் தொலைந்துவிடுகிறேன்
உனைத் தேடி!

நீ இல்லாத
கனவுகளில்
பார்வை எதற்கு...
கண்களைக்
குத்திக் கொள்கிறேன்,,
உன்னைக் காணும்
வரைக்கும்!

உன்
நினைவு வராத
இதயத்தை
இழந்து விடுகிறேன்.,
என்னில்
உன் ஞாபகம்
முடிவில்லாதும் வரை!

காணும் கனாக்களில்
நீ இன்றேல்,
அது கனவல்ல
அன்று இரவுமல்ல!

இன்று
உன் மௌனத்தில்
மயங்கிய
என் இதயம்
மௌனமாகிவிட்டது...
சில வாரங்களில்
ஓய்வு பெறும் தறுவாயில்
ஓமாயக் கிடக்கிறது!

காதலி
என்னைக் காதலி!
உன்
பால் முகத்தை
பார்த்தது முதல்
என்னை இழந்தேன்....
பெண்களை
மறந்தேன்....
இதயம் உன்னையே
அழைத்தது!

அன்று
என்...
இதய அறைகளை
நாளங்களும்
நாடிகளும்
மணமேடையாக்கின...
உனக்கும்
எனக்கும்
திருமணப் பதிவு
நாடியால்
பதிவிடப்பட்டது!

உன்
இசைக்கும் விழிகளால்
ஈர்க்கப்பட்டேன்...
கொஞ்சும் நகைப்பால்
உன்னில்
கொழுகிக் கொண்டேன்!

உன்னில்
என் அன்பை அளவிட
அளவு கோல் இல்லை...
என் தாய்தான்
எனக்கு எல்லாம்
அதுதான் நீயும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலி
என்னைக் காதலி!
அன்றேல்...
என்
பிணைத்துக்காவது
மாலை போட்டுவிடு,

மண்ணறையிலும்
உன்னை
நேசித்துக் கொண்டேயிருப்பேன்!

## வாழ்வில் எனக்கும் உனக்கும்

சோதரா!
அகிலத்தின்
ஆண்மை
விழித்து நிற்க
நீ எழுந்துவிடு!

கண்ணியமெனும்
கனமான
வார்த்தையை
கை கோர்த்துவிடு!



நீ
அறியாமலும்
உன்னில்
எதிர்காலம்
கருவாக
மறைந்து நிற்பதை
அறிந்தவனாய் இரு!

உன்
கண்ணியத்தை
உயர்த்திக்கொள்...
உன்னிடம்
உண்மை
தானாகவே வளரும்!

சொர்ப்பனத்திலிருக்கும்
உன்
தூயோனை
தினமும் வழிப்படு,
அப்போதே
ஜன்னத் எனும்
மாளிகையில்
உனக்குமோர்
அறை, கிடைக்கும்!

பொய்யெனும்
வார்த்தையை
பூண்டோடு
அழித்துவிடு....
உன் மனம்
பூஞ்சோலையாகப்
பிரகாசிக்கும்!

27 JUN 2011
Library



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணமும் மயங்கிடும்
மலரை
விரும்பாதே,
அதன்
மனதை விரும்பு!

அன்றில்
உன் சிந்தனையை
மேம்படுத்து
நிச்சயம்
வெற்றி உனக்கே!

மணப்பதெல்லாம்
மலரென்று எண்ணி
மயங்கிவிடாதே
சோதரா!
அதிலும் முட்கள்
மறைந்திருக்கும்
என்பதைப்
புரிந்து கொள்!

நீ......
காதலெனும்
கோலம் பூண்டு
கண்ணியத்துக்குரிய
உன் தாயின்
மானத்தை
அவமானமாக்கி
விடாதே!

பின்
தந்தை ஜெயிலுக்கும்
தாய்
கயிற்றுக்கும்
இரையானதைக்
கண்டு...... நீ
கலங்க வேண்டுமா....?
கண்ணீர்
வடிக்க வேண்டுமா.....?
பொறுப்பு
உன் கையிலேயே!

நீ
கல்விக் கூடம்
செல்வதன் நோக்கம்
கற்பதற்கே அன்றி
காளையாய்
அலைவதற்கல்ல!
நீ.....
கல்வியை
நாடினால்
கல்வி
உன்னை நாடும்!
கல்வியை
கருணையோடு நேசி,
அப்போதே
அது
உன்னை நேசிக்கும்!

எழுந்திடு
புரிந்திடு நற் செயலால்
மறைவதற்கு முன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் விண்ணப்பம்

உன் மௌனத்தில்
ஊமையானேன்!
இன்று
என்
வார்த்தைகள்
வரிகளாகிவிட்டன!

உன்
புன்னகை கண்டு
முல்லையை
அறிந்தேன்
நீ
பொன்னைக்கண்டு
பொடிவைத்து விட்டாய்
என்னை!



மலர் உனக்கு
மலர் கொடுத்தேன்
குப்பைத் தொட்டியில்
வாங்கிக் கொண்டாய்!

நீ
முள்ளில் மலர்ந்த
ரோஜா என்றிருந்தேன்
இல்லை இல்லை
ரோஜாவை
காயப்படுத்த வந்த
முள்ளென
காட்டிக் கொண்டாய்!

இன்று
என் கண்ணீர்
மழையில் நனைகிறேன்
குடைபிடிக்க
கைகள் இல்லாமல்!

அன்று முதல்
என்
இதயச் சுமைகளை
தலைகுனிந்து
தாங்கிக் கொள்கிறாய்
பேனா நண்பி!

என்
கண்ணீர் ஊற்று
வற்றியது கண்டு
இம்மடலுக்கு
இரத்த தானம்
செய்கிறாள்
விரலிடுக்குத் தோழி!

என்
நாடியின்
இதய விண்ணப்பங்கள் இது!
உன்
முடிவுகளை
என் இதயத்தில்
நிரப்பிவிடு!

University Library 27 JUN 2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைக் காலங்கள்

தாயின்
கருப்பையைச் சிறையில்
சில மாதங்கள்
சிறையிருந்தோம்!

இரு வருடங்கள்
தாயின்
இரத்தத்தை
அருந்தினோம்!

ஐந்தாவது வயதில்
பாடசாலைப் பூங்காவில்
வித்துக்களாய்
விதைக்கப்பட்டோம்!

இன்று
ஆசான்கள் ஊற்றிய
அறிவு நீரில்
செழித்திருக்கின்றோம்!

சில மாதங்களில்
இப்பூங்காவிலிருந்து
பூரண விடுமுறை
அளிக்கப்படும்!

சில சிறகுகள்
பல்கலைக்கழக
நந்தவனங்களுக்கு
தொடர்ந்து
தேனருந்த
பறந்துவிடும்!

பலரின்
பரிதவிக்கும் முகங்களில்
கண்ணீர் மழை
பொழியும்!

மலர்களுக்கும்
வண்டுகளுக்கும்
இடையில்
இப்பூங்காவில் வீசிய
காதல் தென்றலும்
விடுமுறையோடு
விடைபெறும்!



இதுவரை
எம்மில் முளைத்த
அறிவு முளைகளை
நடுவதற்கு
பல கம்பனி வயல்களை
நாடுவோம்!

இறுதியில்....
பாடசாலைப் பூங்கா
நினைவில் வந்து
எம்
அசம்பாவிதங்களை
அசை போடும்!


பின்னர்
கழிகின்ற வினாடிகள்
கண்ணீராய்
கரையும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதல் நெஞ்சம்

உன்னை
மறப்பதென்பது
என்
கண்களை
இழந்தது போல்!




உன்னை
காண்கிற பொழுதில்
என் இதயம்
பூஞ்சோலையாகிறது!

பூத்திருக்கும்
உன்
விழிகளில்தான்
என் விழிகள்
விழிக்கின்றன
என்
கண்களுக்குள்
உன் வதனம்!

என்
மடல்கள்
குப்பைத் தொட்டியானாலும்
வார்த்தைகள்
உன்
இதயத்தில்!

ஓராண்டு
ஓரமாகிவிட்டது
உன் முகம்பார்த்து
என்
காதல்தான்
ஊமையாகவே
இருக்கிறது!



உன் நினைவில்
கண்ணீர்க் கடலில்
நீந்திக் கொண்டிருக்கிறேன்....
மீழ்வதும்
தாழ்வதும்
உன்
வார்த்தைகளில்!

UNIVERSITY
27 JUN 2011
Library

## குருவிக் கூடு

பரந்த மேனியின்
அங்கங்கள் அத்தனையும்
தனக்கே சொந்தமா....
என்ன....?
தன்...
குடி சிறிது எனினும்
சொந்தங்கள்
உலகம் பெரிது,
என்கிறது - இச்
சின்னச் சிட்டு....



தன் குடியில்
அறையில்லை.....!
அன்றியும்
ஆத்ம ஞானிகள்
அடிக்கடி
ஆசீர்வதிப்பது திண்ணம்!

என்....
கோபுரத்திற்கு வாயில்லை,
அன்றியும்....
வானவர்கள்
வாழ்த்துவது வழக்கமே....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தித்திக்கும்
வண்ணச் சொண்டால்
சிதறடிக்கும் முட்களைச்
கொண்டு......
சிகரமமைக்கிறது
சிட்டுக் குருவி......!

என் கோயிலின்
சுவர்கள்,
சிந்திக்க வைக்கும்
சிற்ப நார்கள்.....!

மண மகனுக்கு
மாண்புடன் அமைக்கும்
மகாகோபுரம்....
அது...
மாட மாளிகை என்ன?

ஏன்
உதட்டுக்கு
அயர்வில்லை - ஏன்???
நாளுக்கு நாளமைக்கும்
நார் குடிசைகளால்!

விழிகள் உறங்குவதில்லை!
தினமும்,
ஊறிக் கிடக்கும்
உந்து கணைகளின்
ஊசாட்டத்தினால்!

நாளை விடியுமா....?
ஓ...... எனின்
எங்கே
கோபுரம் அமைப்பது.....!

# இதயமே இதயமே

பேனாத்தாய்
வெற்றுத் தாள்களில்
அழுததால்தான்
நாம்
காதல் இன்பம்
காண்கிறோம்!



அன்று
எம் காதலுக்காய்
கண்கள் காவியம்
பாடியது
இன்று
பேனா கண்ணீர்
வடிக்கிறது!

மலருக்குப் பிறந்தோய்
நீ மலரானாய்
நான் வண்டாக...

நீ
கோபத்தோடும்
என்னைக் கொஞ்சுவதை
உன்
பேனா வரைந்த காவியம்
காட்டி விட்டது!

என்
பிறந்த நாள் விழாவை
உன்
உதடுகள்தான்
ஆரம்பமூட்டுகின்றன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்
பிறந்த நாள் எப்போது
என் உதடுகள்
தவிக்கின்றன.

நீ
வீசிய பார்வை வலையில்
சிக்குண்டது
என் இதயம்!

இன்று
உன்னைக் காணாத
பொழுதுகளில்
தரையில் கிடக்கும்
மீனாக
என் இதயம்

எம் காதலுக்கு
சாட்சியாக இறைவன்!

நாம்
மாய உலகில்
மந்திர வாதிகளுக்குப் பிறந்த
மக்கள்
எம்
காதல் தவிர!

## உலகின் போக்கு

உலகப் பந்தின்
உச்சியில்
அணையாத தீபமாய்
மக்களை வதைக்கும்
எரி அம்புகளால்
எள்ளி நடைபோடும்
இதயமில்லா உருவமே
யுத்தக் கிடங்கு!



நாடு நாடென்று
கூட்டையளிக்கும்
துர்பாக்கியின் ரவைகளே
குப்பை மேட்டில்
கானல் நீராய்ச்
கரைந்தோடும்
இன்றைய வம்சம்!

பணமெனும் பந்தில்
பட்டி மன்றம் அரங்கேறும்,
குணமில்லாத்
தலைவர்கள் குதித்தாடும்
அரிதக் கிடங்கே
மாந்தரின்
மானம் பரிதவிக்கும்
அரசியல் குழி!

தாய்ப்பாலுக்கு
விசமும்....
ஏந்துவோர்க்கு
கையில் நெருப்பும்
வேண்டாதோர்க்கு
மடலில் லஞ்சமும்,
வாரி வைக்கும்

Library 27 JUN 2011



641227
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லோர்களே
இன்றைய நாட்டின்
ஞான விளக்காய்
ஒளிர்கிறார்கள்!

வல்லோனுக்கு
ஏட்டும்.....
கள்வனுக்கு
ஓட்டும்....
கடைக்காரனுக்கு
வட்டியும்
கனமானவர்களுக்கு
வணக்கமும்
கணக்கறியாமல் வழங்கும்
காளையாகிவிட்டார்கள்
இன்றைய சந்ததிகள்!

அடுப்பில் விறகை
எரிக்கும் முகங்கள்
இன்று
விறகாய் மாறி..... தன்
கால்களை எரிக்கிறார்கள்,
அநாதையெனும்
பட்டம் பெற்று!

குழந்தைக்கு
கள்ளிப்பாலும்
தனக்கு
அலறி வித்தும்
இயற்கை அருளிய
இலவச உணவென்று
உண்டு
மாய்கிறார்கள்

## கவிதை மரம்



நான் வளர்ந்து வரும்
கவிதை மரம்
என் ஆணிவேர்
இம் மண்ணில்
ஆழமாகிவிட்டது...
இனி.... பக்க வேர்கள்
இடம் பிடிக்க
சற்று நாட்களே
போதுமானது!

இந்தக் கவிதை
வித்து நிலைபெற
கல்லையும் கவிதையால்
பஞ்சாக்கும்....
முள்ளையும் பூவாக்கும்,
முத்து முத்து
கவிதை பாடும்
முழுமை பெற்ற ஆசானுக்கே
புகழனைத்தும்!

சிறு சிறு
கிளைகள்தான் என்னில்!
அதிலும் கொடிகள் படர
கொழு கொம்புகள் அதிகம்!

என்
கிளைகள் ஒவ்வொன்றிலும்,
வண்ண வண்ண இலைகள்
பூவிற்கு நிகராய்
தன்னை அழகு படுத்தும்!
அதில் இலக்கிய வாசம்
வீசிடும்....
இலக்கணமெனும் வடிவம்
அமைந்திருக்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இலங்கை தேவியின்
மகனல்லவா....
உலகத் தந்தையின்
பேரனும் அல்லவா...
என் தாயை
நான் பெருமைப் படுத்த
வேண்டுமல்லவா....
அவளுக்கு உலகில்
ஞான ஒளியை
தேடிக் கொடுக்க
வேண்டுமல்லவா...

ஓ...
என் கிளைகள்
படர்ந்து, அடர்ந்து
வளரட்டும்!
அதில்....
உலகமே நிழல் பெறட்டும்,
அதனால் நாட்டில்
ஒளி பெருகட்டும்!

## அகிம்சை ஆயுதம்

ஒற்றுமை வேண்டுமடா
ஒரு தேசம்
பிறந்ததடா....!

ஆட்கொல்லிகள்
நாமடா
அடிமைகளும்
நாமடா...!

பிறப்பு தனில்
ஒன்றானோமடா
பிறந்தவுடன்
மதம் பிரித்தோமடா...!

யுத்தப் போர்வை
பூண்டோமடா
ஏன் பித்தம்
கலக்கம் ஆனோமடா...!

உன்
கடவுள் ஒருவனடா
உருவாகும் கவலைக்கு
எண்ணில்லையடா....!

எம் நாடும்
ஒன்றுதானடா
உழைத்திடுவோம்
ஒன்று படடா...!

கட்சிகள்
பலதானதடா
கடைசியில் சிம்மாசனம்
ஒருவனுக்குத்தானடா...!

நாம் வீதத்தில்
குறைந்தோமடா
நாட்டில் எமக்கும்
உரிமையும் குறைவுதானடா...!

நம் போராட்டம்
வேண்டாமடா
மக்கள் வதைபாது
வாழட்டுமடா...!

University Library 27 JUN 2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தியை
நினைத்துப் பாரடா
அவன்,
பொறுமையை நிலைநாட்டடா....!

அகிம்சை வழியில்
நடந்தானடா
நாட்டுக்கே
சுதந்திரம் பெற்றானடா.....!

நாமும் அகிம்சை ஆயுதம்
தூக்குவோமடா
நாட்டை ஒருகை
பார்ப்போமடா...!

## காதல் முத்துக்கள்

அன்பானவளுக்கு
உன் அன்பன்
எழுதும்......
காதல் முத்துக்களைப்
பாராய்....!

என்னவளே!
உன் முகத்தில்
பொதிந்திருக்கும்
அமைதியில்
என் கண்கள்
உயிர்ப்பித்தன!

தினமும்
உன் வதனத்தை
காண்கிறேன்...
நீ
அறியாமலேயே



உன் மெல்லிய
புன்னகையில்
என்னை தினமும்
இழக்கிறேன் உன்னிடம்!

நான்....
உன்னைக் காணாத
பொழுதில்
என் கனாச் செடியில்
காட்சி தருகின்றாய்
மலர்ந்த மலராக!

தினமும்
உன்னால் வாடுகிறேன்
நினைவாலேயே
சாகிறேன்....
பேச முற்படுகிறேன்
அப்போதும்
வார்த்தைகள் முட்டுகின்றன!

என் தூக்கத்திலும்
நீயே....
படிக்கும் போதும்
நீயே...
பார்வையெல்லாம்
நீயே....
எல்லாமே நீதான்
என் உயிரும்
உனக்கேதான்!

உன்...
பால் முகத்தை
நான்
பார்த்துப் பேச
உன் அனுமதி வேண்டும்....
தருவாயா..???



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னில்
அன்பு கொண்டு
உருகும் எனக்கு,
உந்தன்
அன்பு கிடையாதா?

என்னை – நான்
உனக் கென்றேன்,
என்னில் முழுதும்
நீதான்....
உன்னில்???

உன்னை விரும்பும்
உயிராய் கேட்கிறேன்,
என் காதலை
ஏற்பாயா?

இப்படிக்கு
உன்னை விரும்பும்
உயிர் அன்பன்!

# இஸ்லாத்தின் கண்

பெண்ணே!
உன் பர்தாவால்
முகத்தை மறைக்க
நான்,
சொல்ல வேண்டுமா?



நீ பருவமடைந்த
பாவையல்லவா...
இஸ்லாமிய சாம்ராஜ்யத்தில்
ஈடேறும் பெண்ணல்லவா....

அது மட்டுமன்று....
இஸ்லாத்தைப் பரப்ப வேண்டிய
கண்ணும் நீயல்லவா...

இதையெல்லாம்
நீ புரியாமல் நடக்கின்றாயா?
இல்லை
புரிந்தும் நடிக்கின்றாயா?

இல்லை இல்லை
நான் தவறாக சொல்லி விட்டேனா...
ஓ.....!
நீ.... பர்தா அணிந்திருக்கின்றாய்
பாதித்தலை பர்தாவுக்குள்
மீதித் தலை வெளியுலகிற்குமாய்!

நீ நன்கு படித்தவளல்லவா?
இஸ்லாத்தை
அறிந்தவளும் அல்லவா?
அது மட்டுமா....
எம் நபிகளார்
காட்டி வைத்ததை
நாம் மீட்டி முடிப்பது
எம் கடமையல்லவா?

தியாகத்தில்
கட்டி எழுப்பப்பட்ட மார்க்கத்தை
நீ.... தூசிபோல்
வீசி விடுவது ஞாயமோ?

நீ.... மக்கள் சந்ததியை
உருவாக்க வந்தவளல்லவா?
ஓ..... இந்த

University Library 27 JUN 2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயா ஞால உலகில் அது போதுமா?
இல்லை இல்லை
ஆகிராவிற்கு அடித்தளம் போடு...
அப்போதே மோட்சம் பெறுவாய்!
நீ உலகின்
புதுமைப் பெண்தானே...
ஓ... அப்படியென்றால்
இஸ்லாத்தின் புதுமைகளை
நீ அறிய வேண்டுமல்லவா...?

இஸ்லாம்....
எளிமையான மார்க்கம்
புதுமையான மார்க்கம்
புத்தி கூறும் மார்க்கம்!
அது மட்டுமா?
உடலுக்கு சிறப்பு தொழுகை
உன் நோய்களுக்கு
சிறப்பு நோன்பு
பணத்துக்கு சிறப்பு ஸகாத்
தர்மத்துக்கு சிறப்பு ஸதகா!

இதை நீ... அறியவில்லையா?
ஏன்... அறிந்தும் நடிக்கிறாய்....
நீ.... ஹப்சாவின் உருவமல்லவா?
அன்னையின் படி
ஒழுக வேண்டாமா?

உன் முகத்தை
மறைப்பதால்,
அழகென்ன குறைந்து விடுமா?
இல்லையே இல்லை....
உன் அழகு மிஞ்சி விடப் போகிறது..
ஆனால்...
இருட்டில்தான் வெளிச்சம் வரும்
புரிந்து கொள்!

# இரண்டாவது செல்வர்

பெண்ணே!
உனக்கு
பேதை எனும் பட்டமளிப்பு
யார் தந்தது?

நீ...
உலகிற்கொரு செல்வர்
என்பதை புரியாதவர்களா...
இல்லை
புரிந்த மடையர்களா...?

யார் சொன்னால் என்ன?
அமிர்தம் அமிர்தம்தான்
ஒரு போது விசமாகாது..!



காதலிக்க
பெண் வேண்டும்...
கண்ணடிக்க
பெண் வேண்டும்....
காமத்துக்கும்
பெண் வேண்டும்...
கணவனின்
ஆண்மையைச் சுமக்கவும்
பெண் வேண்டும்.....

பெண்ணே!
உன்
புகழ் ஓங்குகையில்
உனக்கேன்
மனக்கவலை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணே! கலங்காதே!
நீ
முழுமை பெற்ற செல்வம்!

பெண்ணே!
கள்வர்கள் மீது ஒரு
கண்ணாகவும்
காதலர்கள் மீது ஒரு
பெண்ணாகவும்
காமர்கள் மீது
மின்னி மங்கிடும்
மின்னலாகவும் இரு!
வாழ்வில் விமோசனம்
பெறுவாய்!

## எனது காதல்

காதல் ஒரு
இன்பம்,
காதல் ஒரு
கவலை!



காதல் ஒரு
வைத்தியம்,
காதல் ஒரு சுகம்!

காதல் ஒரு
உறவு,
காதல் ஒரு தீவிரவாதி!

காதல் ஒரு
திருமணம்,
காதல் ஒரு
கானல் நீர்!

காதல் ஒரு
மாத்திரை
காதல் ஒரு
விசம்!

காதல் ஒரு
அழுகை,
காதல் ஒரு
ஆதரவு!

## மலர்களை வாட விடாதே

மரணப் படுக்கையின்
புதை குழியாய் கிடக்கும்
இப் பூமியில்...
மானிடா!
உனக்கு எதற்கு
வரதட்சனை...?
இல்லை.... இல்லை
சீதனப் பிச்சை!



உன் பலவீனத்தை
துறந்து விடு!
பலாத்காரத்தை
ஒதுக்கிவிடு!
கன்னிகளுக்கு
வாழ்க்கை கொடு!
அவளின் கனவுகளை
உன்னில்
கரைத்துவிடு!
பெண் சமுதாயம்
உன்னைப் போற்றிவிடும்
சன்மார்க்கம்
உன்னை வழி நடாத்தும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தும்
பெண்கள் சீ...!
என்று சொல்லும்
சீர் கெட்டதனமே
நீ கேட்பது....
கவனம்
மணமுடித்த பிறகு
நீயும் சீ.... யாகிவிடுவாய்!

மானிடா... நீ
சிந்திக்க வில்லையா....???
பெண்களின்
சீரழிவை நீ
சிந்திக்க வில்லையா....?
எதற்குடா இப்படி
சீர் கெட்டதனம் உனக்கு!

வேண்டாமடா....
அதை விரட்டிவிடு
அவனை மகர் கொடுத்து
அழைத்து விடு!

மானிடா
நீ.... சிந்திக்கவில்லையா....?
அவளிடம் பிச்சையெடுத்து
அவனுக்கே மகர் கொடுக்கிறாயே!
நீ... மனிதனா?
இல்லை
மனித உருவிலிருக்கும்
இதயத்தால் இறந்த
பிணம் நீ!

வேண்டாமடா
வேண்டவே வேண்டாம்!
மலர்களை வதைக்காதே,
வாடவும் விடாதே....
வாழ்க்கை எனும்
நீர் ஊற்றி
அதை வளர்த்துவிடு!

## வாக்குப் பிச்சை

ஒரு காலம் வரும்
கையேந்தாமல்
இருக்கையில்
காலடிக்கு வந்து
பிச்சை கொடுக்கும்
நாளது!



சுவர்களில்
அவர்களின்
பின் உருவம்
சுடர் விடும்!

வீட்டுக்கு வீடு
தேர்தல் பிரச்சாரம்
நடைபெறும்!

ஒரு கூட்டம்
வீதியில் அடிபடும்
மறு கூட்டம்
அடிக்கப்படும்!

ஜெயில் கம்பிகளும்
எண்ணப்படும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுகள்
கட்டிக்கொடுக்கப்படும்
வீதிகள்
சீரமைக்கப்படும்
குறித்த சின்னங்களைக்
காட்டி....
வாக்கு
கேட்கப்படும்!

மேடைகள்
பல ஏறி இறங்குவார்கள்
தான்
இது செய்வேன்
அது செய்வேன்
என பிரசங்கிப்பார்கள்!

## இயற்கை ஓசைகள்

கலைகள்
என்னில் நித்தம் வருகிறது
காலங்கள்
என்னை முத்தமிடுகிறது!

கவிதைகள்
என்னில் படிந்து விடுகிறது
உடலின்
கருமைகள் பிரிந்து விடுகிறது!



நிலவு
என்னை அழைக்கிறது
நிலவுக் கவிஞனாய்
அழைக்கிறது!

மலர்கள்
என்னை ஏற்கிறது
மன்மதனாய்
என்னை ஏற்கிறது!

உலகம்
என்னை நேசிக்கிறது
நான் மொழிந்த
கவிதைகள்
என்னை நேசிக்கின்றன!

University ... Library
27 JUN 2011

நான்
மலர்களை நேசிக்கிறேன்
வாடாத மலர்களாய்
நேசிக்கிறேன்!

## விதி



வானக் குழந்தை
மாரிக் கண்ணீர்
வடிக்கிறாள்,
இயற்கைத்தாய்
கோடைக் கைக்குட்டையால்
துடைக்கிறாள்...

பூமி மாதா
அழுத கண்ணீரையும்
அழுக்கான
கைகுட்டையையும்
குப்பைத் தொட்டியில்
வாங்கிக் கொள்கிறாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறர் கண்ணீர்
துடைக்கிறாள்
இவள்!
ஆனால்
தன் கண்களில்
கருக் கட்டியிருக்கும்
முகில்கள் காணாது!

பள்ளக் குடியில்
பிறந்து விட்டால்
பாவிகளுக்கு
பயந்தோடிவரும்
கண்ணீர் வெள்ளத்தில்
தாழ்வதென்றே
இவளின்
விதியேட்டில்
எழுதப்பட்டுவிட்டது!

## எதிர்காலம் இப்படித்தான் இருக்க வேண்டும்

மக்கள்!
வாடா மலராக வேண்டும்
அதை வையகமே
வரவேற்க வேண்டும்!



செல்லடிகள்
ஓய்ந்துவிட வேண்டும்
செல்லமான அடிகள்
நிலைத்து வர வேண்டும்!

மனிதர்களிடம்
மனிதன் பிறக்க வேண்டும்
மண்டைக்கனம் நீங்கி
மனிதனாய் வாழ வேண்டும்!

பெண்கள்
சீதனம் பெற்றிட வேண்டும்
ஆண்கள் சீர்மையாக
மணமுடிக்க வேண்டும்!

காதல்
வெற்றி பெற வேண்டும்
கடைசி வரைக்கும்
காத்திருப்பவளை
கைப் பிடிக்க வேண்டும்!

விஞ்ஞானிகள்
ஓய்வு பெற வேண்டும்
ஓசோனின் ஓட்டைகள்
ஒட்டிவிட வேண்டும்!

போராயுதங்கள்
இறந்து போக வேண்டும்
போற்றக்கூடிய மக்களாய்
வாழ்ந்திட வேண்டும்!

உலகமே
ஆயுதம் தூக்க வேண்டும்
அது அகிம்சை
ஆயுதமாக வேண்டும்!

காந்தி நடையில்
நடந்திட வேண்டும்
அந்த நடையின்
மர்மத்தைப் புரிந்திட வேண்டும்!

எம்மிலும்
காந்தி உருவம் வேண்டும்
அது நாட்டுக்காக
செயல்பட வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் மூளை
விலை போக வேண்டும்
வேற்று நாட்டுடன்
வேறு பட்டிருக்க வேண்டும்!

புதியதை நாம்
படைக்க வேண்டும்
நாடுகள் எம்மை
புதுமையாய் நோக்க வேண்டும்!

எந்த உயிரிலும்
நாட்டுப்பற்று வேண்டும்
தன்னை நாட்டுக்காய்
அர்ப்பணிக்க வேண்டும்!

துப்பாக்கி ஏந்துவோர்
இல்லாதிருக்க வேண்டும்
நாடோ எழுச்சி
பெற்றிருக்க வேண்டும்!

நாமும்
வல்லரசு ஆக வேண்டும்
வாய்மை என்றும்
நிலைத்திட வேண்டும்!

இயந்திரங்கள்
உருவாக்க வேண்டும்
உலகமே எம்மில்
உருகி நிற்க வேண்டும்!

நாட்டில்
ஐக்கியம் வேண்டும்
எம்மில் ஐயமே
இல்லாதிருக்க வேண்டும்!


மீண்டும் சங்க கால
ஆட்சி வேண்டும்
சங்க மருவிய காலமே
இல்லாதிருக்க வேண்டும்!

நாடு நந்தவனமாய்
இருக்க வேண்டும்
மனித முகங்கள்
மகிழ்ச்சி பெற வேண்டும்!

எனக்கு
எதிர்காலமும்
இப்படித்தான் வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



University of Peradeniya
27 JUN 2011
Library

நெஞ்சம் வெளியீடு

641227

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

…VERSIT… OF PE…

வகுப்பெண்…………… ஈட்டலெண்……………

# இலங்கைப் பல்கலைக்கழக நூலகம்


பேராதனை.

## இரவல் பெறுவோருக்கு அறிவித்தல்

இந்நூல் பல்கலைக்கழக நூலகத்தினது உடைமை. நூலக இரவல் விதிகளுக்குப் புறம்பாக, இதனை இசைவாணையின்றி வைத்திருத்தல் பாரதூரமான குற்றமாகும். நூலகக் கையேட்டிலுள்ள இரவல் பெறுவதற்கான நியதிகளையும், சட்டங்களையும் செவ்வனே பின்பற்றுமாறு இரவல் பெறுவோர் கேட்கப்படுகின்றனர்.

நூல்களை துப்பரவாகவும் ஒற்றைகளை மடிக்காமலும், பென்சிலால் வரையாமலும், மற்றும் முறைகளில் குறியீடுகள் செய்யாமலும் வைத்துக்கொள்ளுமாறு தயவாகக்கேட்கிறோம். திருப்பித் தரும் நூல்களின் நிலைமைக்கு வாசகர்களே பொறுப்பு. ஆதலினால், இரவல் பெற முன்னர் நூலில் உள்ள ஊறுகளை அவர்கள் முகப்பு மேசையிலுள்ள நூலகத் துணைவர்களுக்குச் சுட்டிக் காட்டி விட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிரியரைப் பற்றி

கந்தளாய் மண்ணில் சமகி மாவத்தையினைட் பிறப்பிடமாகக் கொண்டவர். பிறந்த திகதி 1980-01-01, தி/பேராற்று வெளி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தன்னுடைய ஆரம்பச் கல்வியினைக் கற்றார்.

தமிழ் மொழி மீதும்,தமிழ் இலக்கியங்கள் மீதும் ஈடுபாடு இருந்த போதிலும் மாவனல்லை மண்தான் மொழிமீதும்,இலக்கியத்தின் மீதுப் அதிக ஈடுபாட்டினை இவருக்கு ஏற்படுத்தியது என எண்ணுகிறேன். இதனால் தற்போது 13ஆம் ஆண்டு கலைப்பிரிவில் கல்வி கற்றுச் கொண்டிருக்கும் மாவனல்லை ஸாஹிரா தேசிய பாடசாலையினையும், தனக்குத் தமிழ்ப் .பாலூட்டிய ஆசான் நிந்ததாசனையுப் குறிப்பிடுகின்றார்.

ஏ. தாரிக்கின் குருவிக் கூடு எனும் இக்கவிதைத் தொகுதியினைப் பாடசாலைச் காலத்திலேயே வெளியிடுவது எமது பாடசாலைக்கும் எனக்கும் பெருமை அளிக்கிறது.

**அதிபர், ஏ.கே.எம். பௌஸ்,**
மாவனல்லை சாஹிரா தேசிய பாடசாலை.

641227

Typeset & Print by:
**Micro Graphics** *OFFSET* PRINTERS, MAWANELLA. ☎:035-47035

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org